No. of Printed Pages : **11**

101872

**6085**

பதிவு எண்
Register Number

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |

# பகுதி - III – சிறப்புத் தமிழ்
# Part III — Advanced Language — TAMIL

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 180

**அறிவுரை :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச், சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** இவ்வினாத்தாள் 4 பகுதிகளாக அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள குறிப்பிற்கேற்ப வினாக்களைத் தேர்ந்தெடுத்து உரியவாறு விடையளிக்கவும்.

## பகுதி - I

**குறிப்பு :** பின்வரும் **அனைத்து** வினாக்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ள **நான்கு** விடைகளில் பொருத்தமான விடைகளைத் தேர்ந்தெடுக்கவும். பொருந்தும் விடையினைக் குறிக்கும் எழுத்தை மட்டும் வினா எண்ணோடு இணைத்து விடைத்தாளில் எழுதவும்.

**30x1=30**

**1.** இறைவன் எல்லாவற்றையும் தானே படைப்பவன் என்பதைக் கம்பர் எவ்வடியால் உணர்த்துகிறார் ?

(அ) நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா

(ஆ) அலகி லாவிளை யாட்டுடை யாரவர்

(இ) தலைவ ரன்னவர்க் கேசர ணாங்களே

(ஈ) உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்

**2.** ''ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து'' - இக்குறள் ஒழுக்கத்தின் எந்நிலையை உணர்த்துகிறது.

(அ) சிறப்பு (ஆ) வரையறை

(இ) பயன் (ஈ) செயல்

[ திருப்புக

3. அளித்தஞ்சல் என்றவர் நீப்பின் தெளித்த சொல்

தேறியார்க் குண்டோ தவறு? - இதனுள் படர்க்கையில் குறிக்கப் பெறுபவர் யார்?

(அ) தலைவன் (ஆ) தலைவி

(இ) தோழி (ஈ) வேறொருவர்

4. நெய்தற் கலியிலுள்ள செய்யுள்களின் எண்ணிக்கை

(அ) 33 (ஆ) 35 (இ) 29 (ஈ) 17

5. புறநானூற்றிலுள்ள 'கடிமரம் வருந்தத் தந்தியாம் பிணித்த' எனும் பெருஞ்சித்திரனாரின் செய்யுளடி காட்டும் பண்டைய அரச மரபு யாது ?

(அ) காவல் மரத்தில் யானையைக் கட்டுதல்

(ஆ) காவல் மரத்தை வழிபடுதல்

(இ) ஒவ்வொருவருக்கும் காவல் மரத்தைக் காக்கும் பொறுப்பு

(ஈ) மன்னன் பரிசில்களைக் காவல் மரத்தினருகிருந்து வழங்குதல்

6. மணிமேகலையிடம் மாதவி ''நிகர்மலர் நீயே கொணர்வாய்'' என்றாள். இவ்வாறு கூறுவதன் நோக்கம் யாது?

(அ) மணிமேகலையின் துயரை மாற்றுதல்

(ஆ) மாதவி மலர்களை விரும்புதல்

(இ) மாதவியின் துயரை மாற்றுதல்

(ஈ) மணிமேகலை மலரை விரும்புதல்

7. கண்ணன் அழிவிலிருந்து காக்கும் கடவுள் என உணர்த்தும் வில்லிபாரதச் செய்யுள் தொடர் எது ?

(அ) முத்தருக்கெல்லாம் மூலம் (ஆ) வேத முதல்வன்

(இ) சிலைக்கை விசயன் (ஈ) மெய்த்தவப் படிவ வேதியன்

8. கீழுள்ள சுரதாவின் பாடலடிகளுள் எதனில் உருவகம் உள்ளது ?

(அ) அவர் சொன்ன உவமைகளைத் தொகுப்போமாயில்

(ஆ) வெள்ளத்தில் தோன்றியெழும் தண்ணீர் முட்டை

(இ) ஆறுபடி நூறுபடியாகும்

(ஈ) பாடல் அமைப்போர்க்குப் பல்லவி

9. கீழுள்ள அடிகளுள் எது 'கை'யைக் குறிப்பதாகும் ?

(அ) நன்றாய் உழைக்க உதவுவது

(ஆ) வெறுவினரின் சித்தநாச மாலும்

(இ) பூவிதழ் நம் கண்மயக்கி ஈர்ப்பது

(ஈ) பூமிதனில் தண்புனலாய்க் கொட்டுவது

10. உழைப்போன் பக்கமே நியாயம் உள்ளதென்பதை உணர்த்தக் கவிஞர் சொல்கேளான் வடித்துள்ள புதுக்கவிதை வரி எது ?

(அ) கொடுத்ததை வாங்கிக் கொண்டு நடையைக் கட்டினேன்

(ஆ) ஓங்கி உயர்ந்த பனைமரம் மனக்கண்ணில் அசைந்து அழைத்தது

(இ) அய்யா ஒரு நாள் ஒரு பனைமரம் ஏறிப்பாருங்கள்

(ஈ) வெயிலில் கூடை சுமந்திருந்த நுங்கு வியாபாரி

11. தவறான சொல்யாட்சி பெற்றுள்ள வாக்கியம் எது ?

(அ) மிதிலைப்பட்டி என்னும் ஒரு ஊர் சேலம் மாவட்டத்தில் உள்ளது

(ஆ) அழகிய சிற்றம்பலக் கவிராயர் என்னும் ஓர் அன்பர் எனக்கு உதவினார்

(இ) அங்கே கலைமகளும் திருமகளும் ஒருங்கே களிநடம் புரிந்தனர்

(ஈ) பல அரிய தமிழ்ச்சுவடிகள் பல நூற்றாண்டுகளாகச் சேகரித்து அவர் வீட்டிலே பாதுகாக்கப் பெற்றிருந்தன.

[ திருப்புக

12. கீழுள்ள நான்கனுள் எதில் பண்பாட்டு மரபினை வெளிப்படுத்தும் சொல்லாட்சி காணப்படுகிறது ?

(அ) கவிராயர் (ஆ) ரூபாய் (இ) தாங்கள் (ஈ) நான்

13. ஈழத் தமிழரின் பேச்சு நெல்லை மாவட்ட வழக்கும் காணப்படுவதைத் தெரிவிக்கும் சான்று

(அ) வீட்டில் வைத்துப் பார்த்தேன் (ஆ) இங்கே இருப்பது புத்தியில்லை

(இ) 10 மணி தொடக்கம் (ஈ) வரப்போறேன்

14. ஈழத் தமிழர்கள் புதிய சொல்லாக்கங்களைப் பேச்சு வழக்கில் கொண்டுள்ளாரெனத் தெரிவிக்க சாலை சாலினியார் தரும் எடுத்துக்காட்டு எது ?

(அ) விற்பனவு (ஆ) திணைக்களம்

(இ) கடுதாசி (ஈ) மறியல்

15. தவறில்லாச் சொல்லாட்சி பெற்றிருப்பதைத் தேர்ந்தெடுக்கவும்

(அ) காந்தியடிகள் மனத்திட்பம் கொண்டவர், எனவே இறுதி வரையிலும் போராடினார்

(ஆ) விடுதுலைப் போராட்டம் வெற்றி பெற்றது, எனவே மக்கள் அயராது உழைத்தனர்

(இ) நாம் எல்லாரும் நல்லவரே, எனவே அவரைப் பற்றி அறிந்திருந்தோம்

(ஈ) அவன் விளக்கம் தெளிவாக இருந்தது, எனவே நன்றாக விளக்கினார்

16. கீழுள்ளனவற்றுள் எது பட்டறிவைக் குறிக்கும் சொல் ?

(அ) உசாவல் (ஆ) கல்வி (இ) காட்சி (ஈ) பாடு

17. <u>நன்றியுணர்வும்</u> மனிதனின் தெய்வம் பற்றிய சிந்தனைக்கு அடிப்படையாக அமைந்தது - கோடிட்ட தொடர் உணர்த்தும் பொருட் குறிப்பு யாது?

(அ) தெய்வச் சிந்தைக்கு நன்றியுணர்வுதான் முதன்மையான காரணம்

(ஆ) தெய்வம் பற்றிய சிந்தனையால் நன்றியுணர்வு தோன்றியது

(இ) நன்றியுணர்வு போன்ற பிறவும் தெய்வம் பற்றிய சிந்தனை தோன்றக் காரணமாயின.

(ஈ) எல்லா உணர்வுகளும், நன்றியுணர்வின் அடிப்படையாய்த் தோன்றின.

18. சங்க இலக்கியங்களில் 'கருப்பொருள்' என்பது எதனைக் குறிக்கும் ?

(அ) உணர்த்தும் பொருள்

(ஆ) வருணனைப் பகுதிகள்

(இ) மாந்தரும் பிற உயிர், உயிரில் பொருள்கள்

(ஈ) நிகழ்ச்சிகள் நடைபெறுகின்ற இடம்

19. "வன்மை உயர்வு மனிதர் நலமெல்லாம்

பெண்மையினால் உண்டென்று

பேசவந்த பெண் அழகே"

- எனப் பாரதிதாசன் கூறிய மொழிகளிலிருந்து அவரிடம் எப்பண்பு வெளிப்படுவதாகத் திலகவதி குறிப்பிடுகிறார் ?

(அ) அழகுணர்வு (ஆ) இரக்கம்

(இ) துணிவு (ஈ) பெருமிதம்

20. கீழுள்ள ஊர்களுள் எது முனிவர் பெயரைக் கொண்டுள்ளது ?

(அ) தென்காசி (ஆ) திருநெல்வேலி

(இ) பரங்குன்றாபுரம் (ஈ) சாம்பவர் வடகரை

21. ஆகுபெயர் பயன்படுத்தப்படாத பழமொழி எது ?

(அ) ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

(ஆ) நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி

(இ) ஆலும் வேலும் பல்லுக்குறுதி

(ஈ) நாளும் கிழமையும் நலிந்தோர்க்கில்லை

22. கீழுள்ள வாக்கியங்களில் எதனில் இடவாகு பெயர் உள்ளது ?

(அ) உலகம் உண்ண உண் (ஆ) வெள்ளை உடுத்தினான்

(இ) சட்டைக்கு இரண்டு மீட்டர் எடு (ஈ) வற்றல் உண்டான்

[ திருப்புக

23. 'வந்தான்' என்பது முழுமையாகக் குறிப்பது எது ?

(அ) திணையை (ஆ) திணையின் பால் பிரிவை

(இ) காலத்தை (ஈ) பாலையும் காலத்தையும்

24. மாறுபட்டுள்ள வினையெச்சம் எது ?

(அ) விரைந்து (ஆ) சிரித்து

(இ) மெல்ல (ஈ) ஓடி

25. கீழுள்ளவற்றுள் உவம உருபாக வரும் இடைச்சொல் எது ?

(அ) அத்து (ஆ) அன்ன (இ) அற்று (ஈ) அம்ம

26. கீழ்வருவனவற்றுள் உற்றறிதல் மட்டும் பெற்ற உயிர் எது ?

(அ) மரம் (ஆ) சங்கு (இ) எறும்பு (ஈ) தும்பி

27. கீழ்வருவனவற்றுள் பலபொருள் குறித்த ஓர் உரிச்சொல் எது ?

(அ) சால (ஆ) உறு (இ) தவ (ஈ) கடி

28. கீழுள்ள தொடர்களுள் எது பிரிமொழிச் சிலேடைக்கு உரியதாகும் ?

(அ) பலகை (ஆ) நிறம் பச்சை

(இ) விளக்கொளி (ஈ) தெருண்டோர்

29. தவறாகப் பொருத்தப்பட்டிருப்பது எது ?

(அ) பிரிந்தவரும் பேசினர் - ஒன்றா வஞ்சித்தளை

(ஆ) காட்சிக்கவர் எளியரானார் - ஒன்றிய வஞ்சித்தளை

(இ) வேண்டியருமே எனக்கு - ஒன்றிய வஞ்சித்தளை

(ஈ) என்றுமுளவே நன்று - ஒன்றா வஞ்சித்தளை

30. குறளடி நான்காய் ஒரு பொருள் குறித்து ஒரு செய்யுள் மட்டும் வருதல்...

(அ) சிந்தடி வஞ்சிப்பா (ஆ) அளவடி வஞ்சிப்பா

(இ) வஞ்சித்துறை (ஈ) வஞ்சித் தாழிசை

## பகுதி - II

**குறிப்பு :** பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் 50 சொற்களில் (31-ஆம் வினா தவிர்த்து) விடை தருக.

### பிரிவு : அ

**(31-32) இரு** வினாக்களுக்கும் விடையளி. **2x5=10**

31. 'தாயே உயிரே' - எனத் தொடங்கும் மொழி வாழ்த்துச் செய்யுளை அடிப்பிறழாமல் எழுதுக.

**அல்லது**

'அழுக்காறு' எனத் தொடங்கும் ஒழுக்கமுடைமை அதிகாரக் குறளையும், ..... 'சொல்' என முடியும் சொல்வன்மை அதிகாரக் குறளையும் அடிப்பிறழாமல் எழுதுக.

32. பதிற்றுப்பத்தில் பரணர் சேரனின் சிறப்பை "இனியார் உளரோ முன்னுமில்லை" - எனக் கூறி விளக்குவது யாது ?

**அல்லது**

திருமாலின் தோற்றத்தைக் கண்டு கண்ணன் கூறியவற்றை விளக்குக.

### பிரிவு : ஆ

**(33-34) இரு** வினாக்களுக்கு விடையளி. **2x5=10**

33. அழகிய சிற்றம்பலக்கவிராயர் படைத்த நூல்கள் யாவை ?

**அல்லது**

'ஈழமும் பாட்டைப் பாடுவதில்லை, படிக்கிறது' - இவ்வாக்கியம் உணர்த்தும் பொருளை விளக்குக.

34. தொல்காப்பியத்தில் தெய்வம் பெறுமிடம் பற்றிப் பேராசிரியர் ச. கணபதிராமன் கூறுவது யாது ?

**அல்லது**

'கருணானந்தர் சஞ்சீவி மருந்துகள்' - குறிப்புத் தருக.

[ திருப்புக

## பிரிவு : இ

**(35-38)** எவையேனும் **இரு** வினாக்களுக்கு விடையளி. **2x5=10**

**35.** இருபெயரொட்டு ஆகுபெயரை விளக்கி எடுத்துக்காட்டுத் தருக.

**36.** மூவறிவு மற்றும் நாலறிவுயிர்கள் எவை ? விளக்குக.

**37.** வேற்றுமை அணியைச் சான்றுடன் விளக்குக.

**38.** புதுக்கவிதைகளில் மேற்கொள்ளப் பெறும் படிம உத்தியைச் சான்றுடன் விளக்குக.

## பகுதி - III

**குறிப்பு :** பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் **100** சொற்கள் அளவில் விடை தருக.

## பிரிவு - அ

பின்வரும் **வினாவிற்கு** விடையளி. **1x10=10**

**39.** திருவள்ளுவர் வழிநின்று சொல்வன்மையினை வரையறுத்து அதன் சிறப்பினை எடுத்துக்காட்டுக.

**அல்லது**

தோழியின் அறிவு மேன்மையை நெய்தற்கலி வாயிலாக விளக்குக.

## பிரிவு - ஆ

பின்வரும் **வினாவிற்கு** விடையளி. **1x10=10**

**40.** மனத்திட்பத்தின் தேவையைப் பாவலரேறு எவ்வாறு வலியுறுத்துகிறார் ?

**அல்லது**

‘குடும்பம் ஒரு பல்கலைக்கழகமாக வேண்டும் என்பது பாரதிதாசன் குறிக்கோள்’ எனத் திலகவதி அவர்கள் ஏன் கூறுகிறார் ?

## பிரிவு - இ

எவையேனும் **இரு** வினாக்களுக்கு விடையளிக்கவும். **2x10=20**

**41.** சங்கம் மருவிய நூல்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.

**42.** திருமந்திரம் பற்றிக் கட்டுரை ஒன்று வரைக.

**43.** போற்றிப் பாடல்கள் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.

**44.** இரட்டைக் காப்பியங்கள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

## பிரிவு - ஈ

பின்வரும் **வினாக்களுக்கு** விடையளிக்கவும். **2x10=20**

**45.** கீழுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தேர்ந்தெடுத்து கட்டுரை வரைக.

(கட்டுரை, உவமை, மரபு, பழமொழி, இன் இணைத்தொடர் ஆகியன பெற்று அமைதல் வேண்டும்.)

(i) விடுதலை இயக்கத்தில் தமிழகம்

(ii) மாசு நீங்க மரம் வளர்ப்போம்

(iii) தொடர் சாதனங்களின் நன்மை தீமைகள்

[ திருப்புக

**46.** உங்கள் தெருவிற்குச் சாலை வசதி வேண்டி உரிய அலுவலருக்கு ஒரு வேண்டுகோள் கடிதம் எழுதுக.

**அல்லது**

தக்க வேலை வேண்டி உரிய நிறுவனத்திற்குத் தம் தகுதிகளைக் குறிப்பிட்டு விண்ணப்பம் எழுதுக.

## பகுதி - IV

**குறிப்பு :** பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் **150** சொற்கள் அளவில் விடை தருக. **4x15=60**

**47.** திருவள்ளுவரின் சொல்லாட்சித் திறனைப் ''பிரிவாற்றாமை'' அதிகாரம் கொண்டு விளக்குக.

**அல்லது**

'யாதும் ஊரே...' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலின் பண்பாட்டு இலக்கியச் சிறப்பினை எடுத்துக்காட்டுக.

**48.** பாரதியாரின் பாஞ்சாலி சபதத்தில், திருதராட்டிரனை உயர்ந்தவனாகப் பாரதியார் எவ்வாறு காட்டுகிறார் ?

**அல்லது**

குருதிக் கொடையின் சிறப்புகளாகக் கவிஞர் வெற்றியழகன் கூறுவன யாவை ?

**49.** 20-ஆம் நூற்றாண்டில் தொடக்கக்கால உரைநடையில் பிறமொழிச் சொற்கள் மலிந்திருந்தமையினை, டாக்டர் உ.வே.சா.வின் கட்டுரை கொண்டு வெளிப்படுத்துக.

**அல்லது**

ஈழத்தமிழ் மக்கள் பேச்சிலுள்ள தனித்தன்மையான சொல், தொடர் வழக்குகளை விளக்குக.

50. மனிதனுக்குத் தெய்வச் சிந்தனை தோன்றி வளர்ந்தமைக்கான காரணங்களைப் பேராசிரியர் ச. கணபதிராமன் வழி நின்று விளக்குக.

**அல்லது**

ஆபிரகாம் பண்டிதரின் இசைப்பணி குறித்து ஒரு கட்டுரை எழுதுக.

-o0o-